தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண் 2, தியாகராயர்சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 11.11.2020**

**முன்னிலை**

**திரு ரா.ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 515/SCIC/2020**

திரு K.ராமு .. மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் /
எஸ்டேட் அலுவலர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
சேலம் கோட்டம், .. பொது அதிகார அமைப்பு
சேலம்-7.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 14.11.2019 தேதியிட்டு அனுப்பிய மனுவில், அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் சேலம் கோட்டத்தில் கடந்த 4 ½ ஆண்டுகளில் எத்தனை வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, அனுமதியளிக்கும் உதவிப் பொறியாளர் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை 4 இனங்களில் தகவல்களாகக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 26.11.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர் 19(1)-ன்கீழ் 05.12.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் 13.01.2020 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பி, தான் கோரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து அவற்றைத் தனக்குப் பெற்றுத்தருமாறு கேட்டுள்ளார்.

2. அதன்பேரில் மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது இவ்வாணையத்தால் ஏற்கனவே 06.07.2020-ல் பிறப்பிக்கப்பட்ட

ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதற்கு கடைசி வாய்ப்பாக 24.07.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, அவர் ஆணையத்திற்கு 30.07.2020-க்குள் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. மேற்சொன்ன ஆணையின் தொடர்ச்சியாக மனுதாரர் 15.07.2020 தேதியிட்டு உரிய தகவல் கிடைக்க விசாரணைக்கு உத்தரவிடுமாறு கேட்டு ஆணையத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்.

4. அதன்பின்னர் வழக்கின் விசாரணை 17.10.2020 அன்று நடத்தப்பட்டது. விசாரணையின் போது மனுதாரர் தம்முடைய கோரிக்கைகளுக்கு பொதுத் தகவல் அலுவலர் எவ்வித பதிலும் வழங்கவில்லை என்றும், தாம் நேரடியாக பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்துக்குச் சென்று ஆவணங்களை பார்வையிட அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்துக்குச் செல்ல அனுமதியளிக்கப்பட்டு, வழக்கின் விசாரணை 19.10.2020-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. அதன்பின்னர் வழக்கின் விசாரணை 19.10.2020 அன்று நடத்தப்பட்டது. விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். அடுத்த விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் இருவரையும் விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்து, வழக்கின் விசாரணை 06.11.2020-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

5. அதன்பின்னர் வழக்கின் விசாரணை 06.11.2020 அன்று நடத்தப்பட்டது. விசாரணையின் போது மனுதாரர், தாம் அலுவலகத்துக்கு நேரடியாக சென்று பார்வையிட கோரிக்கை வைத்ததாகவும், அதுபற்றி பொதுத் தகவல் அலுவலர் எதுவும் குறிப்பிடவில்லை என்று கூறினார். பொதுத் தகவல் அலுவலர் 09.11.2020 அன்று மனுதாரர் நேரடியாக அலுவலகத்துக்கு வந்து ஆவணங்களை பார்வையிட ஒப்புக் கொண்டார். வழக்கின் விசாரணை 11.11.2020-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

6. அதன்பின்னர் வழக்கின் விசாரணை 11.11.2020-ல் நடத்தப்பட்டது. விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் அனைத்துத் தகவல்களையும் மனுதாரருக்கு வழங்கிவிட்டதாகத் தெரிவித்தார். மனுதாரர் நேரடியாக அலுவலகத்துக்கு வந்து ஆவணங்களை பார்வையிட்டு, தகவல்களை CD வடிவில் பெற்றுக் கொண்டதாகவும் பெறப்பட்ட

தகவல்களால் தாம் மனநிறைவு அடைந்துள்ளதாகவும் ஆணையத்திற்குத் தெரிவித்துள்ளார். **ஆகவே இவ்வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

ஒம்/- (ரா. ராஜகோபால்)
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA 515/**SCIC/2020**</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
எஸ்டேட் அலுவலர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
சேலம் கோட்டம்,
சேலம்-7.

<u>மனுதாரர்</u>

திரு K.ராமு,
24/5-2, குடுமியான் தெரு,
சிவதாபுரம்,
சேலம்-636 307.

*PR/PS 13/11/2020*

Tamilnadu Slum Clearance Board

Salem Division

| From:- | To:- |
|---|---|
| R.Ravikumar, B.E., | The Managing Director |
| Executive Engineer | Tamilnadu Slum Clearance Board |
| Tamilnadu Slum Clearance Board | 5, Kamarajar Salai |
| Salem Division | Chennai -5 |
| Salem -7 | |

Lr.No. 418 / EC/2011 Dated : 27-06-2019

Sir,

**Sub** : Estt - TNSCB – Salem Division – submission of return of assets and liabilities as per Rule 7(3) of Tamilnadu Government Servent conduct Rules 1973 details of staff – Submitted – regarding.

Ref : 1. The Managing Director, TNSCB/Lr.No.A4/5833/2018 dated 29-05-2019

With reference to the letter cited above, Assets and Liabilities details of the following officers and employees of Tamilnadu Slum Clearance Board of Salem Division are submitted for your kind information.

**Thiruvalargal**

1. R. Ravikumar, Executive Engineer
2. S.Dhanasekaran, Assistant Executive Engineer
3. C.Vijayamohan, Assistant Executive Engineer
4. S.Saravanakumar, Assistant Engineer
5. P.Janarthanan, Assistant Engineer
6. P.Senthilkumar, Assistant Engineer
7. S.V.Sangeetha, Assistant Engineer
8. A.Vaiyapuri, Assistant Engineer
9. P.Mohan, Assistant Engineer
10. T.R.Srinivasan, Assistant Engineer
11. S.Senthilvel, Assistant Engineer
12. R.Saravanan, Assistant Engineer
13. C.Maniviswanathan, Assistant Engineer
14. K.Chandrahari, Assistant Engineer
15. M.Vinothini, Assistant Engineer
16. B.Rajendran, Draughts man G II
17. M.Bhaskar Upadaya, Estate Officer

18. P.Sellapillai, Supdt
19. S.Meenatchi, Steno Typist
20. S.Amutha, D Man, Gr III
21. D.Senthilkumar, Junior Assistant
22. K.Umaiappan, Junior Assistant
23. K.Palanisamy, Junior Assistant.

27/06/19

Executive Engineer
Salem Division.

2/7/2020

27.6.19